www.Padasalai.Net

01.06.2024 முதல் 31.08.2024
மூன்று மாதங்களுக்கு
சம்பளம் வழங்கும் அதிகாரம்
(Pay Authorization for the month of
June- 2024 to August -2024)

பள்ளிக்கல்வித் துறை,
தலைமை செயலகம்,
சென்னை – 600 009.

கடித (ofile) எண்./4872/பக5(1)/2024-1நாள்.30.05.2024

அனுப்புநர்
திரு. ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப.,
அரசுசெயலாளர்.

பெறுநர்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள் /
சார் கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர்கள், சென்னை–01 / 08 / 35.
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள்.

0 6 JUN 2024

ஐயா,

பொருள்: பள்ளிக்கல்வி 2009–2010 மற்றும் 2011–2012 ஆம் ஆண்டுகளில் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் தோற்றுவிக்கப்பட்ட 2408 ஆசிரியர் மற்றும் 888 ஆசிரியர் அல்லாத பணியிடங்களுக்கு 29.02.2024 வரை அரசால் தொடர் நீட்டிப்பு ஆணை வழங்கப்பட்டு முடிவடைந்த நிலையில் 01.06.2024 முதல் மேலும் மூன்று மாதங்கள் தொடர் நீட்டிப்பு ஊதியக் கொடுப்பாணை (Pay Authorization) வழங்குதல் –தொடர்பாக

பார்வை:
1. அரசாணை (நிலை)எண்.46, பள்ளிக் கல்வித்(சி2)துறை, நாள்.01.03.2011.
2. அரசாணை (நிலை) எண்.67,பள்ளிக் கல்வித் (சி2) துறை, நாள். 16.03.2012.
3. அரசாணை (1டி) எண். 101, பள்ளிக்கல்வித் 5(1)துறை, நாள்.20.07.2021.
4. பள்ளிக்கல்வி இயக்குநர் கடிதம் ந.க.எண்.000688/எல்/இ3/2021, நாள் 22.04.2024.

--------

பார்வை 1 மற்றும் 2–இல் காணும் அரசாணைகளில் 2009–2010 மற்றும் 2011–2012 ஆம் ஆண்டுகளில் உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய, அரசு / நகராட்சி / மாநகராட்சி / நலத்துறை நடுநிலைப் பள்ளிகளுக்கு அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் 2064 பட்டதாரி ஆசிரியர் மற்றும் 344 உடற்கல்வி ஆசிரியர் மற்றும் 544 ஆய்வக

www.Padasalai.Net

உதவியாளர் மற்றும் 344 இளநிலை உதவியாளர் ஆக மொத்தம் 3296 தற்காலிக பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டது.

2. பார்வை 3-ல் காணும் அரசாணையில் 2064 பட்டதாரி ஆசிரியர், 344 உடற்கல்வி ஆசிரியர் மற்றும் 544 ஆய்வக உதவியாளர் மற்றும் 344 இளநிலை உதவியாளர் ஆக மொத்தம் 3296 தற்காலிக பணியிடங்களுக்கு 29.02.2024 வரை தற்காலிக தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. பார்வை 4-ல் காணும் தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் மூலம் 01.03.2024 முதல் 31.05.2024 வரை 3 மாதங்களுக்கு விரைவு ஊதிய கொடுப்பாணை (Express Pay Order) வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்து, இப்பணியிடங்களுக்கு 01.06.2024 முதல் மேலும் ஆறு மாதங்களுக்கு ஊதியக் கொடுப்பாணை (Pay Authorization) வழங்குமாறும் பள்ளிக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, மேற்குறிப்பிட்டுள்ள 3296 தற்காலிக பணியிடங்களுக்கு 01.06.2024 முதல் மேலும் மூன்று மாதங்களுக்கு ஊதியம் பெற்று வழங்க ஏதுவாக ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்கப்படுகிறது. மேற்படி அலுவலர்களுக்கான ஜுன் 2024 முதல் ஆகஸ்ட் – 2024 முடிய மூன்று மாதங்களுக்கான சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியப் பட்டியல்கள் உரிய அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில், ஏற்றுக் கொண்டு ஊதியம் பெற அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. இக்கடிதம் அரசாணை (நிலை) எண்.334, நிதி(சம்பளம்)த்துறை, நாள்.22.10.2022-இல் துறைச் செயலாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்பகிர்வின்படி வெளியிடப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

3/6/24

(அரசு சார்புச் செயலாளர்)
அரசு செயலாளருக்காக.

3/6/2024 6/6

**நகல்**

பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை-6

மாநிலக் கணக்காயர், சென்னை-18/35.

நிதி(கல்வி-II)துறை , சென்னை-9.

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

www.Padasalai.Net

அரசு கடித (efile) எண்: 4872/ப.க5(1)2024-1 நாள்: 30.05.2024

நகல் :-

இயக்குநரக ந.க எண்: 000688/எம்/இ3/2021 நாள்: 04.5.24

தகவலுக்காகவும் தக்க நடவடிக்கையின் பொருட்டும்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பப்படுகிறது.

பெறுநர் :-

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்,

ஒப்பம் 7/6/2024

இயக்குநருக்காக.

07/6/2024